19 ஜூலை 2020

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக்காலம் 16 ஆம் ஞாயிறு

மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்



மாதாந்திர கருப்பொருள்:

**நான் அவர்களை உலகிற்கு அனுப்பினேன்**

# அவர் அன்பு செய்தார். எனவே தீர்ப்பளிக்கிறார்

இன்றைய வாசகங்கள் எல்லாவற்றிலும், பொதுவான ஒரு மெல்லிய இழை இணைக்கப்பட்டுள்ளது. அது என்னவென்றால், கடவுள் மனித குலத்தை அன்பு செய்து அதன் மேல் அக்கறை கொண்டுள்ளார் என்பதாகும். இன்றைய முதல் வாசகமான, சாலமோனின் ஞான நூலில், “உம்மைத் தவிர வேறு கடவுள் இல்லை. எல்லாவற்றின்மீதும் நீர் கருத்தாய் இருக்கிறீர்” என்று நாம் வாசிக்கின்றோம். தந்தையாகிய கடவுள் நம் படைப்பாளர், மனிதரின் எந்த தகுதியையும் பாராமல்,

ஒவ்வொரு மனிதரின் மீதும் அவருடைய இரக்கத்தைப் பொழிகின்றார். கடவுள் அனைத்து வல்லமையும் பொருந்தியவராய், உயர்ந்த நீதிபதியாய் இருந்தபோதும், அவருடைய இரக்கத்தினால், அவர் எவ்வளவு மென்மையானவர் என்பதைக் காட்டுகின்றார்.

இன்றைய திருப்பாடலில், கடந்த காலத்தில் இஸ்ராயேல் மக்கள் , தாங்கள் செய்த பாவங்களை மன்னித்து, எதிர்காலத்தையும், நாட்டையும் தங்களுக்கென நிலை நிறுத்திய ஆண்டவரின் செயல்களை நினைத்துப் பார்ப்பதை நாம் பார்க்கின்றோம். நாட்டில் துன்பம் நிகழும் காலத்தில், மன்னிப்பையும் மீண்டும் நிலையான வாழ்வையும் வேண்டி யாவே கடவுளிடம் திரும்பி வருவதைப் பார்க்கின்றோம். “இரக்கமுள்ள கடவுளே, மீண்டும் உம்மை எங்களுக்குக்காட்டும், என்று நம்பிக்கையோடு அவரின் பதிலுக்குக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர் இரக்கம் மற்றும் பேரன்பு காட்டும் கடவுள். கோபத்தை வெளிப்படுத்துவதில் அவர் நீடிய பொறுமை உள்ளவர்.

புனித பவுல் கூறுவது போல, கடவுள் நம் மேல் வைத்திருக்கும் அன்பு மிகவும் மகத்தானது, எனவே தான் நம்முடைய பலவீனத்தில் நமக்கு உதவி செய்வதற்காக, தூய ஆவியை அனுப்பினார். அந்த தூய ஆவியார் தான், வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாத நிலையில் இருக்கும் நம்முடைய மன்றாட்டுகளைக் கூட வெளிப்படுத்த வைக்கின்றார். நம் உள்ளத்தின் ஆழத்தில் இருக்கும் அனைத்தையும் அறிபவரான அதே ஆவியார் தான், கடவுளையும், நம்மையும், தந்தை, மகன் என்ற உறவில் நம்மை இணையவைக்கின்றார். வேறு வகையில் சொல்லப்போனால், மனிதர்களாகிய நாம், வார்த்தைகளால் கூறமுடியாதபோது, கடவுளோடு நம்மை உரையாட வைத்து, உதவிசெய்பவர் அதே தூய ஆவியார் தான்.

இன்றைய நற்செய்தியில் இயேசு தாம் கூறும் உவமையின் வழியாக, கடவுள் அன்பானவராகவும், மன்னிப்பதே அவருடைய இயல்பாகவும் இருப்பதை நமக்கு நினைவூட்டுகிறார். இறுதியில் அவரே, நமக்குத் தீர்ப்பளிப்பவராகவும் இருக்கிறார். பழைய ஏற்பாட்டில், பொதுவாக அறுவடை என்பது, இறுதித்தீர்ப்பைக் குறிப்பதாக காட்டப்பட்டது. நன்மை செய்வோரும், தீமை செய்வோரும் இறுதியில் தீர்ப்புப் பெறுவர். இருந்தபோதும், பிறர் மீட்படைவார்களா என்பதை தீர்மானிக்கும் உரிமை நம்மைச் சார்ந்தது அல்ல; ஒவ்வொருவரின் தனிப்பட்ட செயல்களிலும், கடவுளே இறுதி முடிவை எடுப்பவர் என்று நாம் பொறுமை கொள்ள வேண்டும் . நிச்சயமாக ஒவ்வொரு மனிதரும், கண்டிப்பாகத் தீர்ப்பிடப்படுவர். ஆனால், நம் உள்ளத்திற்கு இறுதி தீர்ப்பளிப்பவர் கடவுளே.

ஏனென்றால், இறுதியில் அனைத்தும் அவர் கரங்களிலே உள்ளது. ✝

**அனைத்தும் அன்பிலிருந்தே வருகிறது அனைத்தும் மனிதனின் மீட்புக்காகவே அர்ப்பணிக்கப் பட்டுள்ளது இந்த இலக்கை மனதில் கொள்ளாமல் எதையும் கடவுள் செய்வதில்லை.**

– புனித சீயன்னா கேத்தரீன்

**இன்றைய வாசகங்கள்:**

ஞான நூல்: 12: 13, 16-19

திருப்பாடல்: 86: 5-6, 9-19, 15-16

உரோமையர்: 8: 26-27

மத்தேயு: 13: 24-43

**வாரம் ஒரு வசனம்**

கடவுள் ஒருவரே நம் ஆன்மாக்களுக்கு இறுதி தீர்ப்பளிப்பவர்

INTERNAL CIRCULATION ONLY
BUL 29/2020

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org




**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. கென்னத் கோபால்


## *2020 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
## மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்
### *2020 ஜுலை (ஆடி) மாதத்தின் கருப்பொருள்:*
### *நான் அவர்களை உலகிற்கு அனுப்பினேன்*

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: **பொதுக்காலம் 16ஆம் ஞாயிறு 18 – 19 ஜுலை 2020**
சா.ஞா 12: 13, 16 -19 தி.பா: 86: 5-6, 9-10, 15-16 உரோ 8: 26-27 மத்தேயு 13: 24-43
**"ஆண்டவரே, நீர் நல்லவர், மன்னிப்பவர்." " தி.பா : 86**

**நிரந்த குடியுரிமை மற்றும் வெளி நாட்டுதொழிலாள சகோதர சகோதரிகளே! அரசாங்கத்தின் வழிமுறைப்படி மறு அறிவிப்பு வரும் வரை, நீங்கள் ஆலயத்திற்கு வந்து திருப்பலியில் கலந்துகொள்ள இயலாது என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.**

**26-07-2010 ( ஞாயிறு)** காலை 8.00 மணி (தமிழ்) காலை 11.00 (ஆங்கிலம்)
**தமிழ் அதிசக்கள்:** பு.பியோ / பு, மத்தியாஸ் 1/ மத்தியாஸ் 2 / ஜூட் / ஜோசப் ( சோன் 14) பு. ஜஸ்டின் / இரேனியஸ் / ஜோன்னா ( காடோங் சோன் 18) பு. ஜெசிந்தா / லூர்த்து அன்னை / பிரான்சிஸ் / லூசியா ( சாகா சோன் -19)

**ஆங்கிலம் அதிசக்கள்:** - பு. கிளேர் / ஆன் / பெர்னார்ட் ( சோன் எ 8) பு. டோமினி / கொல்கொத்தா அன்னை திரேசா / லோரென்சென் ருய்ஸ் / ஃபாஸ்டினா / ராஃபேல் / டேவி ட்(சோன் -9) பு. பிரான்சிஸ் / மைக்கல் ( சோன் -12) பு. பியோ / மத்தியாஸ் 1 / மத்தியாஸ் 2 (சோன் -14) பு. டோன் போஸ்கோ ( சோன் -15) பு. பெர்னடின் 2 / ஜோன் போல் 2. புருனோ - 1 / புருனோ 2 / புருனோ 3 / ஆர்தர் / பெர்னடின் 3 / பெர்னடின் 4 / கேத்ரீன் / S 2 ஹைட்ஸ் ( சோன் -16)

குறிப்பு:
1) திருப்பலியில் பங்கெடுக்க வருபவர்கள் கட்டாயம் முகக் கவசம் அணிந்திருக்க வேண்டும். தயவு செய்து உங்களுக்கான முகக்கவசத்தை உடன் கொண்டு வரவும்.
2) ஆலயத்திற்கு திருப்பலி தொடங்குவதற்கு ஒன்றரை மணி (1 1/2 ) நேரத்திற்கு முன்னதாக வர வேண்டும். பதிவு மற்றும் இதர தயாரிப்புகள் செய்வதற்கு இது தேவைப்படுகிறது.

**நிலையான ஒழுங்குமுறை நடவடிக்கைகள் (SOP)**
1) திருப்பலியில் பங்கெடுக்க வருபவர்கள் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.
2) திருப்பலிக்கு வருபவர்கள் தங்களுடைய அடையாள அட்டையை உடன் கொண்டுவர வேண்டும்.
3) கொடுக்கப்பட்டுள்ள வரைமுறைகளில் நீங்கள் இடம்பெற்றிருந்தாலும், உங்களுக்கு சளி , காய்ச்சல், இருமல், மூச்சு தொடர்பான பிரச்னைகள் இருந்தால் திருப்பலியில் பங்கெடுக்க வர வேண்டாம்.
4) முக கவசம் அணிதல்/ பெயர் பதிவு/ வெப்ப நிலை சோதித்தல் / சுத்திகரிப்பு தெளிப்பானைக் கைகளில் பூசிக்கொள்ளுதல் ஆகியவை ஆலயத்திற்கு உள்ளே வரும்போதும், வெளியே செலும்வோதும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டியவை.
5) திருப்பலியில் பங்கெடுக்க வரும் ஒவ்வொருவருக்கும் எண் எழுதப்பட்ட ஒரு அட்டை தரப்படும். திருப்பலிக்குப் பின் அதை அதற்குரிய இடத்தில் மீண்டும் ஒப்படைக்க வேண்டும்.
6) தற்போது ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.
7) இருக்கைகளில் குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே அமர வேண்டும்.
8) தொடுதல்/ அணைத்தல்/கைகுலுக்குதல் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளது. நற்கருணை கைகளில் மட்டுமே வழங்கப்படும்.
9) கழிவறைகளைப் பயன்படுத்தும்போது தூய்மையைப் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல் அவசியம்.
10) திருப்பலிக்குப் பின் உடனடியாக ஆலயவளாகத்தை விட்டு செல்லுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

குழந்தைகளுக்கான திருமுழுக்கு:
பெற்றோர் ஞானப்பெற்றோருக்கான முன் தயாரிப்பு (அனைத்து மொழிகள்) 01-08-2020 (சனிக்கிழமை)
தமிழ்: 08-08-2020 மாலை 7.00 மணி
ஆங்கிலம்: 15-08-2020 மாலை 7.00 மணி
தேசியமொழி /மாண்டரின் 22-08-2020 மாலை 7.00 மணி
இதுவரை உங்கள் குழந்தைகளின் பெயர்களைப் பதிந்துகொள்ளாதவர்கள் உடனடியாக பங்கு அலுவலகத்தில் பதிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்

## உங்களின் ஆவியை விரிவாக்குங்கள்
கோதுமை விதை மண்ணில் விழுந்து முளைக்கும்போது, எதிரி ( தீயோன்) களைகளை விதைக்கின்றான். ( தவறான போதனைகள், பொய் மற்றும் தீமைகள்) சிறியதாக நாம் வளரும்போது, ஆவியின் வல்லமையை நம்முள் வளர அனுமதித்தால், நாம் மிகுந்த விளைச்சலைத் தருவோம். உங்களின் வளர்ச்சியில் நீங்கள் எங்கே இருக்கின்றீர்கள்? உங்களின் ஆவியை விரிவாக்குங்கள். இதனால் உங்களின் வளர்ச்சியும் விரிவடையும்.

நடமாட்டக் கட்டுப்பாட்டு நேரத்தில் (2020 மார்ச் 18 - 15 ஜுலை) வரை பெறப்பட்ட காணிக்கைகள்:

| பங்கு காணிக்கை | பங்கு காணிக்கை | தியான இல்லம் | பமமேகு உணவு வங்கி |
|---|---|---|---|
| மொத்த தொகை: | **RM 43,316.00** | **RM 19,038.00** | **RM 8905.00** |

***உங்களின் அனைத்து வகையான பங்களிப்புகளுக்கும் மிக்க நன்றி.***
***இறைவன் உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!***

நன்கொடை / காணிக்கைகள்
**கீழ்க்கண்டவற்றில் எதற்கு நன் கொடை அல்லது காணிக்கை செலுத்துகின்றீர்கள் என்று குறிப்பிடவும்:**
(1) பங்கின் நிதி (2) திருப்பலி கருத்துகள்
(3) ஆராதனை அறை சீரமைப்பு (4) பமமேப உணவு வங்கி

**உங்களுடைய தொகையை இணையத்தின்வழி பங்கின் வங்கிக் கணக்கில் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.**
**விவரங்கள் :**
1.வங்கியின் பெயர்: **Public Bank Berhad**
2.வங்கிக் கணக்கில் உள்ள பெயர்:: **Church of Visitation**
3.வங்கிக் கணக்கு எண்: **3121194612**

**பணம் செலுத்தியபின் எதற்கு நீங்கள் பணம் செலுத்தினீர்கள் என்பதை குறிப்பிட மறவாதீர்கள்:**
**(i) தொகை (ii) என்ன காராணம்:**
**(1) பங்கின் நிதி காணிக்கை**
**(2) திருப்பலி கருத்துகள் (பெயர்) - ஆன்ம இளைப்பாற்றி, நன்றி, அல்லது தனிப்பட்ட கருத்துகள்**
**(3) ஆராதனை அறை சீரமைப்பு**
**(4) பங்கு மனித வள மேம்பாட்டின் உணவு வங்கி ( கூடுதல் தகவல்களுக்கு: ஜோன் டேவிட்சன் (017-615 8961) அல்லது பெர்னதெத் (012- 2715840)**

**பங்கு அலுவலக குறிப்புகளுக்காக, நீங்கள் பணம் செலுத்திய ரசீதை பங்கின் மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.**
serembanvisitation@gmail.com

- **உறுதிபூசுதல் அருளடையாளக் கொண்டாட்டத் திருப்பலி**
  ஆகஸ்ட் 30, 2020 ( சனிக்கிழமை) பகல் 2.00 மணி
  உறுதிப்பூசுதல் மாணவர்களுக்கான மறைக்கல்வி வகுப்புகள் 26-07-2020 ( ஞாயிறு) முதல் நடைபெறும்.
  **வகுப்புகள் நடைபெறும் கால அட்டவணை:**
  ஆங்கிலம்: காலை 8.00 - 9.30
  தமிழ் காலை 9.45 - 11.15
  மாண்டரின்: காலை 11.30 - 1.00 (பகல்) வரை
  **வகுப்பறை: ஆலய மண்டபத்தின் மேல்மாடி அறை.**
  அனைத்து பாதுகாப்பு நடைமுறைகளும் கண்டிப்பாக பின்பற்றப் பட வேண்டும்
  **உறுதிப்பூசுதல் மாணவர்களுக்கான ஒப்புரவு அருளடையாளக் கொண்டாட்டம் மற்றும் குருவானவரோடு சந்திப்பு:**
  **ஆகஸ்ட் 22, 2020 (வெள்ளி) திருப்பலிக்கான ஒத்திகை: ஆகஸ்ட் 26, 2020**
- **சமயங்களுக்கிடையிலான கருத்தரங்கு மற்றும் உரையாடல்:** - சமயங்களையும் அதனுடைய ஆன்மீகத்தையும் அறிந்துகொள்ளல் - நடைபெறும் இடம்: மினவுதல் மாதா தேவாலயம், நாள்; 25-07-2020. இந்த நிகழ்வு நன்முறையில் நடைபெற நம் செபங்களை ஒப்புக்கொடுப்போம்.
- **தியான அறை** - எவ்வாறு இந்த அறை தயாராகிறது என்பதை பங்கு முக நூல் மற்றும் இணையத்தின்வழி காணவும்.
- **பங்கின் அனைத்துப் பணிக்குழுக்களின்** தலைமைத்துவமும் மாற்றம் காணவுள்ளது